சிக்கல் தீர்க்கும் நுட்பங்களும் , சி- மொழி நிரலாக்கமும்
மாதிரி வினாத்தாள் - 3

11th Standard

**கணிப்பொறியியல்**

Reg.No. :

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II. நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:00:00 Hrs | Total Marks : 40

## பகுதி - அ

10 x 1 = 10

1) குறிப்பிட்ட செயல்பாடுகளை மீண்டும் மீண்டும் செய்யும் அடிப்படையான நிபந்தனை நுட்பம்.....
(a) வரிசை முறைப்படுத்துதல் (b) பண்முறைச் செயல் (c) கிளைபிரித்தல் (d) பண்முறைச் செயல் மற்றும் கிளைபிரித்தல்

2) பின்வருவனவற்றுள் மாறிலி என்பது எதுவாக இருக்க முடியும்?
(a) எண் அல்லது எழுத்து (b) எழுத்து அல்லது எழுதுசாரம் (c) எண் அல்லது எழுத்து சரம் (d) எண், எழுத்து அல்லது எழுத்துச்சரம்

3) குறியுறு என்பது பின்வரும் எதனை உள்ளடக்கியதாகும்?
(a) எழுத்து (b) எண் அல்லது சிறப்பு குறியுடு (c) எழுத்து அல்லது சிறப்பு குறியிடு
(d) அகரவரிசை எழுத்துக்கள், எண்கள் மற்றும் சிறப்புக் குறியிடுகள்

4) பின்வருவனவற்றுள் மாறியின் பெயராக ஏற்க இயலக்கூடியது எது?
(a) 1 abc (b) 123 (c) a 123 (d) a & 123

5) பின்வரும் எந்த இரண்டு செயற்குறிகள் கொண்டது சுட்டு மாறிகள்?
(a) ! , * (b) * , @ (c) & , * (d) & , !

6) சி-மொழி நிரலில் ஒரு கூற்றின் முடிவுக்குறி எது?
(a) , (b) ; (c) :(colon) (d) "

7) வேறொரு செயல்கூறை அழைக்கின்ற செயல்கூறு, அழைக்கப்படுகின்ற செயல்கூற்றை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(a) அழைக்கும் செயல்கூறு (b) செயல்கூறு மாதிரியம் (c) செயல்கூறின் மாதிரிவடிவம் (d) அழைக்கப்படும் செயல்கூறு

8) சி-மொழியில் எத்தனை வகையான கட்டுப்பாட்டுக் கூற்றுக்கள் உள்ளன?
(a) மூன்று (b) இரண்டு (c) நான்கு (d) ஆறு

9) சுட்டுகள் மூலமாக கட்டுருவின் உறுப்புகளை அணுக பின்வரும் எந்த செயற்குறியைப் பயன்படுத்த வேண்டும்?
(a) புள்ளி (b) அம்பு (c) ஒருமம் (d) இருமம்

10) நிரலின் உடற்பகுதி முழுவதும் எந்த அடைப்புக் குறிக்குள் உள்ளது?
(a) {} (b) <> (c) [] (d) ()

## பகுதி - ஆ

10 x 2 = 20

11) பாய்வுப்படத்துக்கும் போலிக் குறிமுறைக்கும் இடையே உள்ள இரண்டு வேறுபாடுகளைக் கூறுக
12) பலவழிக் கிளைபிரித்தலுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.போலிக் குறிமுறை எழுதிக் காட்டுக
13) சுட்டுஎண் மாறிக்கு இரண்டு எடுத்துக்காட் டுகள் தந்து விளக்குக
14) நிச்சயித்திடாத பன்முறைச் செயலை இரண்டு எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக
15) இருவழிக் கிளைபிரித்தலைவிடப் பலவழிக் கிளைபிரித்தல் மிகவும் இயல்பானது என்பதை விளக்க இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக
16) பொருள்நோக்கு அணுகுமுறை என்றால் என்ன?
17) அடிப்படைத் தரவினங்கள் என்றால் என்ன?விளக்குக.
18) extern மாறிகள் என்றால் என்ன?
19) 100 வரையிலான எண்களின் கூட்டுத் தொகை காணலுக்கான போலி குறிமுறைகளை எழுதுக.
20) செயல்கூறு என்றால் என்ன?

## பகுதி - இ

2 x 5 = 10

21) கொடுக்கப்பட்ட இரு எண்களையும் வகுக்கக்கூடிய மீப்பெரு பொதுக் காரணியைக் கண்டறியும் சி - நிரலை எழுதுக.(உதவிக்குறிப்பு : மீ.பொ.கா. கண்டறிக் கீழ்காணும் பயனர் - வரையறுத்த செயலக்கூறினைப் பயன்படுத்துக)
22) கொடுக்கப்பட்ட மூன்று எண்களில் சிறிய எண்ணைக் கண்டறிந்து சொல்வதற்குறிய பாய்வு படத்தை வரைக.

*******************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in